பதிவு
எண்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

# 2018
# பொதுத் தமிழும் பொது அறிவும்
## பட்டப் படிப்பு தரம்

**(அனுமதிக்கப்பட்டுள்ள நேரம்: 3 மணி)** **(மொத்த மதிப்பெண்கள்: 300)**

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

---

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு 200 வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத் தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும், எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் <u>நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால்</u> குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்டவற்றை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B). (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும்.

   உதாரணமாக நீங்கள் (B) என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   (A) ● (C) (D)

9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. <u>தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.</u>
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. 101 முதல் 200 வரையிலான வினாக்களில் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் தான் முடிவானதாகும்.
12. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.
13. விண்ணப்பதாரர்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் 2-ல் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.

We Shine Academy

We Shine Academy™

1. **சரியற்ற இணையைத் தேர்க**
I) தோல்வற்றி சாயினும் சான்றாண்மை குன்றாமை – தூயவர் செயல்கள்
II) நெஞ்சில் நிறையிலான் கொண்ட தவம் - புதரில் விதைத்த விதை
III) இவ்வுலகில் நில்லாமையுள்ளும் நெறிபாடும் - அறவுணர்வு உடையாரிடத்து உள்ளவை
a) I மட்டும் b) II, III c) இவை அனைத்தும் d) ஏதுமில்லை

2. உலகின் பழமையான நிலப்பகுதி குமரிக்கண்டம். அந்நிலத்தில் தான் தமிழ் தோன்றியது எனக் கூறும் நூல்?
a) முத்தொள்ளாயிரம் b) மாறனலங்காரம்
c) தண்டியலங்காரம் d) தொல்காப்பியம்

3. ஹிட்லருக்கு எதிராகத் திறமையாக வாதாடி, எழுத்து மூலம் ஹிட்லரை மன்னிப்புக் கேட்கச் செய்தவர்?
a) ராஸ் பிகாரி போஸ் b) நேதாஜி
c) சரத் சந்திர போஸ் d) செண்பகராமன்

4. **“மருதம்”** திணையை முதலாகக் கொண்டு துவங்கும் எட்டுத்தொகை நூல்
a) ஐங்குறுநூறு b) கலித்தொகை c) அகநானூறு d) ஐந்திணை ஐம்பது

5. மதுரையை அழிக்க வந்த ஏழு மேகங்கள் பற்றி பாண்டிய மன்னன் இறைவனிடம் முறையிட, இறைவன் நான்கு மேகங்களை காக்க அனுப்பினார். இதனால் நான்மாடக்கூடல் என்னும் பெயர் பெற்றதாக கூறியவர்?
a) திருநாவுக்கரசர் b) மாணிக்கவாசகர்
c) சேக்கிழார் d) பரஞ்சோதியார்

6. கற்பித்தல், அறிவியல் முறைக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும் விருப்பு வெறுப்பற்ற முறையில் கற்பித்தல் நிகழ்தல் வேண்டும் - எனக் கூறியவர்?
a) காந்தியடிகள் b) விவேகானந்தர் c) அம்பேத்கர் d) பெரியார்

7. சிங்கங்களே! எழுந்து வாருங்கள். நீங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித்தள்ளுங்கள் என்று கூறிய வீரத்துறவி?
a) வள்ளலார் b) அரவிந்த் கோஷ்
c) விவேகானந்தர் d) தயானந்த சரஸ்வதி

8. உயிரளபெடையில் அளபெடுக்கும் உயிரெழுத்துகளின் எண்ணிக்கை ____________
a) 10 b) 11 c) 7 d) 12

9. பண்டைத் தமிழரின் இல்வாழ்க்கை, ஒழுக்கம், மகளிர் மாண்பு, அறவுணர்வு முதலியவற்றை அறிய பயன்படும் நூல் எது?
a) அகநானூறு b) புறநானூறு c) ஐங்குறுநூறு d) குறுந்தொகை

10. **பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.**
I) கணிதத்தில் இரட்டை மாமேதைகளாக விளங்கியவர்கள் ஹார்டி மற்றும் ஜாகோபி
II) ஆய்லராக இல்லாவிட்டாலும் இராமானுஜர் குறைந்த பட்சம் ஒரு ஜாகோபி எனக் கூறியவர் லிட்டில்வுட்.
மேற்கூறியவற்றில் தவறானவற்றை கண்டறிக.
a) I மட்டும் b) II மட்டும் c) இரண்டும் d) இரண்டுமில்லை

11. தான் தங்கியிருந்த குடியின் வாயிலில் கதர் அணிந்தவர்கள் மட்டும் உள்ளே வரவும் என எழுதி வைத்திருந்தவர் யார்?
a) பெரியார் b) தருமாம்பாள்
c) தென்னாட்டின் ஜான்சிராணி d) தமிழ்நாட்டின் அன்னிபெசன்ட்

12. **“வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்து”** இவ்வரிகளில் வையை நாடவன் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
a) நக்கீரன் b) தருமி
c) சொக்கநாதர் d) சண்பக பாண்டியன்

13. விடுதலை கவியின் ‘**அச்சமில்லை**’ பாடலுக்கு யாருடைய பாடல் முன்னோடியாக இருந்தது?
a) தருமசேனர் b) நம்பியாரூரர்
c) அருண்மொழித் தேவர் d) திருவாதவூரார்

14. எழுத்துக்கள் பிறப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவை “ஒலியணுக்கள்” – எனக் கூறும் நூல்?
a) தொல்காப்பியம் b) நன்னூல் c) தண்டியலங்காரம் d) மாறனலங்காரம்

15. பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.
I) பல்வகை உயிர்களின் பரிணாம வளர்ச்சியை விரிவாகக் கூறுவது திருவாசகம்
II) “உடம்பிடை தோன்றிற் றொன்றை அறுத்ததன்” என்ற வரிகள் மூலம் அறுவை மருத்துவத்தை மெய்பித்தவர் சேக்கிழார்.
மேற்கூறியவற்றில் தவறானவற்றை கண்டறிக.
a) I மட்டும் b) II மட்டும் c) இரண்டும் d) இரண்டுமில்லை

16. **“ஆனி, ஆடி”** மாதம் எக்காலத்திற்குரிய பெரும்பொழுது?
a) கார்காலம் b) குளிர்காலம்
c) இளவேனிற்காலம் d) முதுவேனிற்காலம்

17. **பொருத்துக**

I) தமிழின்பம் - 1. கி.ஆ.பெ.விசுவநாதன்
II) தமிழியக்கம் - 2. முடியரசன்
III) தமிழ் மருந்துகள் - 3. ரா.பி. சேதுபிள்ளை
IV) மனிதனைத் தேடுகிறேன் - 4. பாரதிதாசன்

a) 3 4 1 2 b) 3 4 2 1 c) 4 3 1 2 d) 4 3 2 1

18. **“தன்னாட்டுப் பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்க்கே உரியது”** இக்கூற்று யாருடையது?

a) அம்பேத்கர் b) பெரியார்
c) காமராசர் d) மேற்கூறிய எவருமில்லை

19. **பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.**

I) கலித்தொகையில் 180 பாடல்கள் உள்ளன
II) தேனினும் இனிய தீந்தமிழ்ப் பனுவல் - எனக் குறிப்பிடப்படுவது நாலாயிரத் திவ்விய பிரபந்தம்
மேற்கூறியவற்றில் சரியானவற்றை கண்டறிக.

a) I மட்டும் b) II மட்டும் c) இரண்டும் d) இரண்டுமில்லை

20. **கீழ்கண்டவற்றுள் தவறானவற்றை தேர்வு செய்க**

I) அந்தந்த அடிகளில் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றி பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள் கோள்
II) பல அடிகளிலும் உள்ள சொற்களை மாற்றிப் பொருள் கொள்வது மொழிமாற்றுப் பொருள்கோள்
III) செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது அடிமறிமாற்றுப் பொருள்கோள்

a) I மற்றும் III மட்டும் b) I மற்றும் II
c) II மட்டும் d) III மட்டும்

21. **பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.**

I) இந்திர தேச சரித்திரம் என்னும் நூலின் ஆசிரியர் காத்தவராயன்
II) இவர் திருவாசகத்திற்கு உரை எழுதியுள்ளார்.
மேற்கூறியவற்றில் தவறானவற்றை கண்டறிக.

a) I மட்டும் b) II மட்டும் c) இரண்டும் d) இரண்டுமில்லை

22. **“பெண்ணுரிமை என்பது ஆணுடன் போர் புரிவதன்று. ஆணுடன் வாழ்ந்து அன்பை வளர்ப்பது பெண்ணின் உரிமைக் கடன்”** – என்று பெண்ணுரிமையை உணர்த்தியவர்?

a) நாமக்கல் கவிஞர் b) பெரியார்
c) தமிழ் தென்றல் d) புரட்சி கவிஞர்

23. **பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.**

I) ஒரு சொல்லோ தொடரோ இருபொருள் தருமாறு பாடுவது சிலேடை மற்றும் இரட்டுற மொழிதல் எனப்படும்.
II) இரட்டுற மொழிதல் = இரண்டு + உற + மொழிதல்
III) இரட்டுறமொழிதல் என்பது இரண்டு பொருள்படப் பாடுவது

**மேற்கூறியவற்றில் சரியானவற்றை தேர்க.**

a) I மற்றும் II மட்டும் b) II மற்றும் III மட்டும்
c) I மற்றும் III மட்டும் d) இவை அனைத்தும்

24. **“தாப்பிசை”** – பிரித்து எழுதுக

a) தாப்பு + இசை b) தா + இசை c) தாம்பு + இசை d) தா + பிசை

25. ரேடியத்தின் அணு எடையைக் கண்டுபிடித்ததற்காக கியூரி அம்மையாருக்கு எந்த ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது?

a) 1911 b) 1912 c) 1903 d) 1904

26. **“கைம்மமாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்”**
இக்குறளில் எவ்வகை அணி அமைந்துள்ளது?

a) உவமையணி b) எடுத்துக்காட்டு உவமையணி
c) வேற்றுப்பொருள் வைப்பணி d) வேற்றுமையணி

27. **பொருத்துக**

| **(விதிகள்)** | **(தோன்றும் எழுத்துகள்)** |
|---|---|
| A) அண்ணம் நுனிநா வருட | 1. ற், ன் |
| B) அண்ணம் நுனிநா நனியுறின் | 2. வ் |
| C) அண்பல் அடிநா முடியுற வரும் | 3. ப், ம் |
| D) மீகீழ் இதழுறப் பிறக்கும் | 4. த், ந் |
| E) மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே | 5. ர், ழ் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a) | 2 | 1 | 4 | 3 | 5 |
| b) | 5 | 1 | 4 | 3 | 2 |
| c) | 3 | 5 | 4 | 2 | 1 |
| d) | 5 | 1 | 2 | 3 | 4 |

28. **“மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்”** இக்கூற்று யாருடையது?

a) வள்ளுவர் b) பட்டினத்துப் பிள்ளையார்

c) ஔவையார் d) கம்பர்

29. **‘நல்வழிக் கொடுத்த நானுடை மறவர்’** இவ்வரிகளின் ஆசிரியர் யார்?

a) தொல்காப்பியர் b) பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

c) கடியலூர் உருத்திரங்கண்ணனார் d) மாங்குடி மருதனார்

30. **கீழ்க்காணும் கூற்றைக் கருத்தில் கொள்க.**

I) “கன்னல் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு, நானோர் தும்பி!”

II) “உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு”

III) 20-ஆம் நூற்றாண்டுக் கவிதைவானில் ஒளிநிலவாய்ப் பவனி வந்த பெருங்கவிஞர்

மேற்கூறிய வாக்கியங்களினால் புகழப்படுபவர் யார்?

a) கண்ணதாசன் b) பாரதியார்

c) முடியரசன் d) பாரதிதாசன்

31. தமிழ்க்கவி, தமிழரின் கவி, தமிழின் மறுமலர்ச்சிக்காகத் தோன்றிய கவி, தமிழரின் புகழ் மேதினியோங்க வேண்டுமெனப் பிறந்த கவி எனப் பலக்கவியாய்ப் புகழப்படுபவர்?

a) பாரதிதாசன் b) பாரதியார்

c) கவிக்கோ அப்துல் ரகுமான் d) திரு.வி.க

32. **‘வேளாண்மை’** எனும் சொல்லின் பொருள் யாது?

a) முறைமை b) பொருள் c) உதவி d) ஈட்டிய

33. **பொருத்துக**

**(பாடல் வரி)** **(ஆசிரியர்)**

A) வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின் 1. புரட்சிக்கவி

B) பாரத நாடு பழம்பெரும் நாடு 2. சுந்தரம்பிள்ளை

C) சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு 3. தேசியக்கவி

D) பெருமுரசதிரப் பெயருமின் 4. தாயுமானவர்

குறியீடுகள் :

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 4 | 3 | 1 | 2 |
| b) | 1 | 2 | 4 | 3 |
| c) | 4 | 2 | 1 | 3 |
| d) | 3 | 2 | 1 | 4 |

We Shine Academy TM

34. இந்தியர்களின் நலனுக்காக எத்தகு இன்னல்களையும் ஏற்பேன். அதற்காக என் இன்னுயிரையும் தருவேன் என்று கூறியவர் யார்?

a) காந்தியடிகள் b) கடலூர் அஞ்சலையம்மாள்

c) மூவலூர் இராமாமிர்தம் d) வள்ளியம்மை

35. திருப்பாவையில் உள்ள பாக்களின் எண்ணிக்கை யாது?

a) 40 b) 147 c) 30 d) 140

36. **“பாவை பாடிய வாயால் கோவை பாடுக”** என கேட்டுப் பாடப்பட்ட நூலின் ஆசிரியர் யார்?

a) அப்பர் b) திருஞானசம்பந்தர்

c) சுந்தரர் d) மாணிக்கவாசகர்

37. **“செவிச்செல்வம், திருக்குறள்”** அலகீட்டு வாய்ப்பாட்டைக் கண்டறிக.

a) புளிமாங்காய்/கருவிளம் b) கருவிளங்காய் /புளிமா

c) கருவிளங்காய் /கூவிளம் d) கூவிளங்காய் /தேமா

38. கல்கி என்பவரால் **“தமிழ் நாடகக் கலைக்கு ஒரு பெர்னாட்ஷா”** எனப் பாராட்டப்பட்டவர்?

a) அறிஞர் அண்ணா b) பம்மல் சம்பந்தனார்

c) சங்கரதாஸ் சுவாமிகள் d) மு.வ

39. **பொருத்துக**

A) சீலம் 1. கப்பம்

B) சுரம் 2. முயற்சி

C) தாள் 3. ஒழுக்கம்

D) திறை 4. பாலை நிலம்

**குறியீடுகள் :**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 3 | 4 | 2 | 1 |
| b) | 2 | 4 | 3 | 1 |
| c) | 1 | 3 | 4 | 2 |
| d) | 3 | 1 | 2 | 4 |



We Shine Academy™

40. **திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்(து)**
**அறனல்ல செய்யாமை நன்று**
இக்குறட்பாவில் பயின்று வரும் ஏழாம் வேற்றுமைத் தொகையை கண்டறிக
a) செய்யினும் b) நொந்து c) தற்பிறர் d) அறன், திறன்

41. தென்திராவிட மொழிக் குடும்பங்களில் வராத மொழி யாது?
a) தமிழ் b) தெலுங்கு c) மலையாளம் d) கன்னடம்

42. **'வஞ்சி நெடும்பாட்டு'** எனும் அடைமொழியால் குறிக்கப் பெறும் நூல் எது?
a) குறிஞ்சிப் பாட்டு b) மலைபடுகடாம்
c) பட்டினப்பாலை d) நெடுநல்வாடை

43. **"இரு நிலம்"** - இலக்கணக் குறிப்புத் தருக
a) பண்புத்தொகை b) உரிச்சொற்றொடர்
c) வினைத் தொகை d) உவமைத் தொகை

44. **"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம்..."** என்ற குறளில் பயின்று வந்துள்ள அணி?
a) பிறிதுமொழிதல் அணி b) உவமை அணி
c) ஏகதேச உருவக அணி d) எ.கா உவமை அணி

45. **பொருத்துக**
A) அகராதி நிகண்டு 1. ஆசிரியர் பெயர் தெரியவில்லை
B) சூடாமணி நிகண்டு 2. நேவண சித்தர்
C) நீலகேசி 3. குணவீர பண்டிதர்
D) வச்சணந்தி மாலை 4. மண்டல புருடர்
**குறியீடுகள் :**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 3 | 4 | 2 | 1 |
| b) | 2 | 4 | 1 | 3 |
| c) | 1 | 3 | 4 | 2 |
| d) | 3 | 1 | 2 | 4 |

46. பெண்மைக்கு, தாய், மனைவி, தமக்கை, தங்கை, மகள் எனப் பன்முகங்கள் உண்டு என்பதனை எடுத்துக் காட்டியவர்?
a) பெரியார் b) பாரதியார்
c) வெ.இராமலிங்கனார் d) திரு.வி.க

47. **"நமக்குத் தொழில் கவிதை"** இக்கூற்றின் ஆசிரியர் பிறந்த ஆண்டு எது?
a) 1882 b) 1891 c) 1942 d) 1923

48. **‘மரபுக் கவிதையின் வேர் பார்த்தவர் புதுக்கவிதையில் மலர் பார்த்தவர்’** எனப் பாராட்டப்படுபவர் பிறந்த ஊர் எது?

a) ஆலந்தூர் b) குவளை c) மதுரை d) பழையனூர்

49. **ஆவுடையார்க்** கோவில் எம்மாவட்டத்தில் உள்ளது?

a) சிவகங்கை மாவட்டம் b) காஞ்சிபுரம் மாவட்டம்
c) புதுக்கோட்டை மாவட்டம் d) திருவள்ளூர் மாவட்டம

50. பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிகர் சீறடியாளகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்

**இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?**

a) சீறாப்புராணம் b) சிலப்பதிகாரம்
c) கம்பராமாயணம் d) தொன்னூல் விளக்கம்

51. **பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.**

I) 1812-ல் ஞானப்பிரகாசம், திருக்குறளை முதன் முதலில் பதிப்பித்து மதுரையில் வெளியிட்டார்
II) “வெல்லாத தில்லை திருவள்ளுவன் வாய் விளைந்த வற்றுள் என பொதுமறையை சிறப்பித்தவர் பாவேந்தர்
மேற்கூறியவற்றில் சரியானவற்றை கண்டறிக.

a) I மட்டும் b) II மட்டும் c) இரண்டும் d) இரண்டுமில்லை

52. **பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.**

I) திருக்குறள் மன்பதைக்கு – உலகுக்கும் பொது எனக் கூறியவர் திரு.வி.க.
II) திருக்குறள் இல்லாவிட்டால் தமிழ்மொழி என்னும் ஒரு மொழி இருப்பதாக உலகத்தார்க்குத் தெரிந்திருக்காது எனக் கூறியவர் கி.ஆ.பெ.விசுவநாதம்
மேற்கூறியவற்றில் சரியானவற்றை கண்டறிக.

a) I மட்டும் b) II மட்டும் c) இரண்டும் d) இரண்டுமில்லை

53. **பொருத்துக**

| **பட்டியல் - I** | **பட்டியல் - II** |
|---|---|
| A) உலகப்புத்தக நாள் | 1. நவம்பர் 19 |
| B) தேசிய ஒருமைப்பாட்டு நாள் | 2. ஏப்ரல் 23 |
| C) மனித உரிமைகள் நாள் | 3. டிசம்பர் 7 |
| D) கொடி நாள் | 4. டிசம்பர் 10 |

**குறியீடுகள் :**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 2 | 1 | 4 | 3 |
| b) | 4 | 3 | 1 | 2 |
| c) | 3 | 4 | 1 | 2 |
| d) | 4 | 1 | 2 | 3 |

54. **பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.**

I) பண்பினை மட்டும் உணர்த்தி நின்று உடன்பாட்டிலும், எதிர்மறையிலும் வரும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம்

II) ஒரு வினைமுற்றுச் சொல், எச்சப் பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம்

மேற்கூறியவற்றில் தவறானவற்றை கண்டறிக.

a) I மட்டும் b) II மட்டும் c) இரண்டும் d) இரண்டுமில்லை

55. **பொருத்துக**

| | |
|---|---|
| A) மடங்கல் | 1. தந்தம் |
| B) கரி | 2. யானை |
| C) கோடு | 3. இடி |
| D) உரும் | 4. சிங்கம் |

**குறியீடுகள் :**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 3 | 4 | 2 | 1 |
| b) | 3 | 4 | 1 | 2 |
| c) | 4 | 2 | 1 | 3 |
| d) | 2 | 1 | 4 | 3 |

56. திருவண்ணா மலைகாஞ்சி திருக்கா ளத்தி
சீகாழி சிதம்பரம் தென் னாரூர் காசி
குருநாடு கேதாரம் கோலக் கொண்டை
கோகரணம் செகநாதம் கும்ப கோணம்

இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல்

a) மதுரைக்காஞ்சி b) மலைபடுகடாம் c) குற்றாலக்குறவஞ்சி d) ஆசாரக்கோவை

57. பின்வரும் வாக்கியங்களை கவனிக்க.

I) எண்பது வெண்பாக்களைக் கொண்டுள்ள ஏலாதி பௌத்த சமய நூல்

II) ஐந்தடிச் செய்யுளான இந்நூலில் ஆறு அருங்கருத்துகளைக் கொண்டுள்ளது.

மேற்கூறியவற்றில் சரியானவற்றை கண்டறிக.

a) I மட்டும் b) II மட்டும் c) இரண்டும் d) இரண்டுமில்லை

58. **"பொதிந்த மெய்மயி ரெண்கினங் களுமரைப்"** இவ்வரிகளில் உள்ள எண்கு என்னும் சொல்லின் பொருள் யாது?

a) பன்றி b) கரடி c) மான் d) எருமை

59. **“நந்தனார் சரித்திரம்”** என்னும் நாடகத்தின் ஆசிரியர் யார்?
a) கோபால கிருட்டின பாரதியார் b) அருணாசலக் கவிராயர்
c) பம்மல் சம்மந்தனார் d) சங்கரதாச சுவாமிகள்

60. பாரதிதாசன் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை எவை?
I) இயற்பெயர் சுப்புரத்தினதாசன்
II) ஷெல்லிதாசன் என்னும் சிறப்பு பெயரைக் கொண்டவர்
III) தமிழ்நாட்டின் இரசூல்கம்சதேவ் என்று அழைக்கப்படுகிறார்
IV) தமிழின்பம் இவர் இயற்றிய நூல்களுள் ஒன்று
V) இவரது காலம் 1891 முதல் 1964 வரை
a) III மற்றும் V சரியானவை b) I, II மற்றும் IV சரியானவை
c) I மற்றும் V சரியானவை d) IV மற்றும் V சரியானவை

61. **“யாமம்”** என்ற சிறுபொழுதின் நேர காலம் எவ்வளவு?
a) காலை 10 மணி முதல் 2 மணி வரை
b) மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை
c) இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை
d) இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை

62. **“ஒருமைத் தோற்றத்து ஐவேறு வனப்பின்”** இப்பாடலின் மூலம் வெளிப்படும் அறிவியல் அறிவு எது?
a) கனிமவியல் அறிவு b) மண்ணியல் அறிவு
c) அணுவியல் அறிவு d) மருத்துவ அறிவு

63. தாராபாரதி பற்றிய தவறான கூற்றை கண்டறிக.
I) எழுச்சிமிக்க கவிதைகள் எழுதுவதில் வல்லவர்
II) இவரது காலம் : 26-02-1947 முதல் 13-05-2000 வரை
III) தமிழக அரசின் சிறந்த கவிஞருக்கான விருது பெற்றவர்
IV) உருவகக் கவிஞர் என்னும் பட்டம் பெற்றவர்
குறியீடுகள் :
a) I மற்றும் II தவறானவை b) I மற்றும் III தவறானவை
c) III மற்றும் IV தவறானவை d) II மற்றும் IV தவறானவை

64. தவறாக பொருந்தியுள்ள இணையைக் கண்டறிக.
a) தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த – பதிற்றுப்பத்து
b) அந்தக் கேணியும் எந்திரக் கிணறும் - பெருங்கதை
c) வறிது நிலைகுய காயமும் - புறநானூறு
d) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் - திருவாசகம்

65. **“ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்**
**ஏனை யிரண்டும் ஒருங்கு”** இவற்றில் இரண்டும் என வள்ளுவர், எதனைக் குறிப்பிடுகிறார்?
a) பண்பு, புகழ் b) புகழ், செல்வம் c) அறன், இன்பம் d) அறம், பொருள்

66. **பொருத்துக அஞ்சல்தலை வெளியிட்ட ஆண்டு**

| **பட்டியல் - I (காலம்)** | **பட்டியல் - II (ஆசிரியர்)** |
|---|---|
| A) 1978 | 1. பிரணவகேசரி |
| B) 2006 | 2. பெரியார் |
| C) 1995 | 3. தமிழ்தாத்தா |
| D) 1962 | 4. இராமானுஜம் |

**குறியீடுகள் :**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 2 | 3 | 1 | 4 |
| b) | 4 | 3 | 1 | 2 |
| c) | 3 | 4 | 1 | 2 |
| d) | 4 | 1 | 3 | 2 |

67. பின்வருவனவற்றுள் பழந்தமிழ்ச்சங்கம் பற்றி மாணிக்கவாசகத்தில் குறிப்பிடும் பாடல் வரிகள் எது?
a) நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
b) தமிழ்கெழு கூடல்
c) கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின்
d) குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள

68. புதிய படவீழ்த்திகள் உருவாக யாருடைய கருத்துக்கள் அடிப்படையாக அமைந்தன?
a) பிரான்சிஸ் சென்கின்சு b) வால்ட் டிஸ்னி
c) மைபிரிட்சு d) ஈஸ்ட்மண்

69. பழமொழி நானூறு பற்றிய கீழ்க்காணும் கூற்றில் சரியானவை எவை?
I) ஆசிரியர் மதுரை கூடலூர்கிழார் ஆவர்
II) எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
III) ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி இடம்பெற்றுள்ளது
IV) முதுரை, முதுமொழி, உலக வசனம் என்னும் சிறப்பு பெயர்கள் உண்டு
a) I மற்றும் II சரியானவை b) I மட்டும் சரியானது
c) IV மட்டும் சரியானது d) III மற்றும் IV சரியானவை

We Shine Academy™

70. உத்தமசோழப் பல்லவரின் காலம் எது?
a) கி.பி. 11 ஆம் நூற்றாண்டு b) கி.பி. 13 ஆம் நூற்றாண்டு
c) கி.பி. 10 ஆம் நூற்றாண்டு d) கி.பி. 12 ஆம் நூற்றாண்டு

71. **"விடுநனி கடிதென்றான்"** இக்கூற்று யார் யாரிடம் கூறியது?
a) இலட்சுமணன் - இராமனிடம் b) இராமன் - இலட்சுமணனிடம்
c) இராமன் - குகனிடம் d) இலட்சுமணன் - குகனிடம்

72. **"பால் வீதி என்பது பலகோடி விண்மீன்களின் தொகுதி என்று மெய்ப்பித்தவர்"** யார்?
a) கோபர் நிகசு b) கலிலியோ c) அரிஸ்டாடில் d) ஐசக் நியூட்டன்

73. **"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"** இதில் நமன் என்ற சொல்லின் பொருள் யாது?
a) துன்பம் b) பாதுகாப்பு c) நோய் d) எமன்

74. **"குறட்டை ஒலி"** – ஆசிரியர் யார்?
a) மு.வரதராசனார் b) லெட்சுமி
c) ஜி.குப்புசாமி d) அறிஞர் அண்ணா

75. யாருடைய ஆட்சி காலத்தில் குறவஞ்சி நாடகங்கள் தோன்றின?
a) சோழ மன்னர்கள் b) பல்லவ மன்னர்கள்
c) மராத்திய மன்னர்கள் d) நாயக்க மன்னர்கள்

76. 'நிலம், நீர், தீ, வளி, விசும்போடு ஐந்தும்' என ஐம்பூதங்கள் பற்றி குறிப்பிடும் நூல் எது?
a) நன்னூல் b) புறநானூறு c) தொல்காப்பியம் d) திருக்குறள்

77. பின்வருவனவற்றுள் விளரியாழ் எத்திணைக்கு உரியது?
a) முல்லை நிலம் b) மருதம் நிலம் c) நெய்தல் நிலம் d) பாலை நிலம்

78. **பொருத்துக**

| **பூ** | **திணை** |
|---|---|
| A) குரவம் | 1. குறிஞ்சி |
| B) காந்தள் | 2. மருதம் |
| C) செங்கழுநீர் | 3. நெய்தல் |
| D) தாழை | 4. பாலை |
| | 5. முல்லை |

**குறியீடுகள் :**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 5 | 2 | 1 | 3 |
| b) | 3 | 5 | 2 | 1 |
| c) | 4 | 1 | 2 | 3 |
| d) | 4 | 5 | 1 | 3 |

79. பொருத்துக

| | |
|---|---|
| A) பரிதிமாற்கலைஞர் | 1. மதங்க சூளாமணி |
| B) சுவாமி விபுலானந்தர் | 2. நாடகவியல் |
| C) மறைமலையடிகள் | 3. நாடகத்தமிழ் |
| D) பம்மல் சம்மந்தனார் | 4. சாகுந்தலமும் |

**குறியீடுகள் :**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 4 | 1 | 2 | 3 |
| b) | 1 | 2 | 3 | 4 |
| c) | 2 | 1 | 4 | 3 |
| d) | 3 | 1 | 2 | 4 |

80. தவறாக பொருந்தியுள்ள இணையைக் கண்டறிக.

a) சரசுவதி மகால் - தஞ்சாவூர்
b) அரசு ஆவணக் காப்பகம் - சென்னை
c) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம - சென்னை
d) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் - மதுரை

81. தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவர் யார்?

a) இயேசுபிரான் b) சூசையப்பர் c) மேரி மாதா d) புத்தபிரான்

82. நல்லந்துவனார் நெய்தல் கலியில் எத்தனைப் பாடல்கள் பாடியுள்ளார்

a) 35 b) 34 c) 29 d) 33

83. தவறாக பொருந்தியுள்ள இணையைக் கண்டறிக.

a) மயிற்பொறி விமானம் - சீவக சிந்தாமணி
b) புட்பக விமானம் - கம்பராமாயணம்
c) வலவன்ஏவா வானூர்தி - பெருங்கதை
d) காதலை வாழி மதி - திருக்குறள்

84. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக

a) மின்சிட்டு b) பொன்முதுகு
c) மஞ்சள் சிட்டு d) இராசாளிப் பருந்து

85. **பொருத்துக**

| **பட்டியல் - I சரணாலயம்** | **பட்டியல் - II மாவட்டம்** |
|---|---|
| A) கரிக்கிளி | 1. தஞ்சாவூர் |
| B) வடுவூர் | 2. காஞ்சிபுரம் |
| C) வெள்ளோடு | 3. ஈரோடு |
| D) கோடியக்கரை | 4. நாகப்பட்டினம் |
| | 5. திருவாரூர் |

**குறியீடுகள் :**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 5 | 1 | 2 | 3 |
| b) | 5 | 4 | 1 | 2 |
| c) | 1 | 2 | 5 | 4 |
| d) | 2 | 1 | 3 | 4 |

86. **‘மற்றுப்பிற’** என்னும் தொடரில் **“மற்று”** என்பது

a) உரிச்சொல் b) இடைச்சொல் c) பெயர்சொல் d) வினைச்சொல்

87. தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?

a) 8 b) 7 c) 9 d) 6

88. **“அறிவை வளர்க்கும் அற்புதக் கதைகள்”** என்னும் நூலின் ஆசிரியர் யார்?

a) ஜானகி மணாளன் b) ஜானகிராமன்
c) ஜெகசிற்பியன் d) ஜெயகாந்தன்

89. **“உழுவார் எல்லாம் மலைபோல் எருதை ஓட்டிப் பொன்னேர் பூட்டவும்”** - இப்பாடல் இடம் பெற்றுள்ள பாடல் தொகுப்பு எது?

a) இசையமுது b) தமிழமுது c) குடும்ப விளக்கு d) பாண்டியன் பரிசு

90. **"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்"** இவ்வரிகளில் மந்தி என்ற சொல்லின் பொருள் யாது?

a) பெண் குரங்கு  b) ஆண் குரங்கு  c) பெண் யானை  d) ஆண் யானை

91. வேலுநாச்சியார், யாருடைய உதவியுடன் ஆங்கிலேயரை வென்று சிவகங்கையை மீட்டார்?

a) ஐதர் அலி  b) திப்பு சுல்தான்
c) முகமது அலி  d) திருவிதாங்கூர் மன்னர்

92. **பின்வரும் வாக்கியங்களை கருத்தில் கொள்க**

I) தென்னாட்டின் ஜான்சிராணி நீலன் சிலை அகற்றும் போராட்டத்தில் தன் ஒன்பது வயது மகளை ஈடுபடுத்தினார்.
II) கடலூர் அஞ்சலையம்மாள், சீனிவாச காந்தி நிலையம் எனும் தொண்டு நிறுவனத்தை அமைத்தார்

மேற்கூறியவற்றில் சரியானவற்றை தேர்ந்தெடு.

a) II மட்டும்  b) I மட்டும்
c) இரண்டும்  d) இரண்டுமில்லை

93. **பொருந்தாத ஒன்றைக் கண்டறிக?**

a) நாலடியார்  b) இனியவை நாற்பது
c) திரிகடுகம்  d) கார் நாற்பது

94. **"சாதி இரண்டொழிய வேறில்லை
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்தமென்போம்"** - இப்பாடலில் யாருடைய சொல்லை அமிழ்தமென்று 'விடுதலைக்கவி' குறிப்பிடுகிறார்?

a) ஔவையார்  b) தமிழ்தாய்  c) பாரதத்தாய்  d) கண்ணம்மா

95. இக்கால ஔவையாரின் நூல்களுள் பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

a) ஆத்திசூடி வெண்பா  b) திலகர் புராணம்
c) குழந்தை அடிகள் புராணம்  d) இராமலிங்க சுவாமிகள் சரிதம்

96. **பொருத்துக**

| **பட்டியல் - I** | **பட்டியல் - II** |
|---|---|
| A) ஒடக் காண்பது | 1. மின்னார் மருங்கு |
| B) வாடக் காண்பது | 2. பூம்புனல் வெள்ளம் |
| C) வருந்தக் காண்பது | 3. கிண்கிணிக் கொத்து |
| D) போடக் காண்பது | 4. சூல் உளைச் சங்கு |
| | 5. பூமியில் வித்து |

**குறியீடுகள் :**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 3 | 1 | 5 | 4 |
| b) | 2 | 1 | 4 | 5 |
| c) | 2 | 4 | 1 | 3 |
| d) | 4 | 2 | 1 | 5 |

97. **பொருத்துக**

| **நூல்** | **பாடல்களின் எண்ணிக்கை** |
|---|---|
| A) காந்திபுராணம் | 1. 431 |
| B) நளவெண்பா | 2. 2034 |
| C) தேம்பாவணி | 3. 409 |
| D) இராமலிங்க சுவாமிகள் சரிதம் | 4. 3615 |
| | 5. 430 |

**குறியீடுகள் :**

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a) | 4 | 5 | 2 | 3 |
| b) | 3 | 5 | 2 | 4 |
| c) | 1 | 2 | 3 | 4 |
| d) | 2 | 1 | 4 | 3 |

We Shine Academy™

98. **கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க :**

I) சமூகச் சீர்திருத்தச் செயல்பாடுகளுக்காக 1970இல் பெரியாருக்கு யுனேஸ்கோ விருது வழங்கப்பட்டது.

II) நடுவண் அரசு 1978இல் அஞ்சல் தலை வெளியிட்டு சிறப்பித்தது.

மேற்கண்ட வாக்கியங்களில் சரியானது எது/எவை?

a) I மட்டும் b) II மட்டும் c) இரண்டும் d) இரண்டுமில்லை

99. **"பேரறி வாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிக்கைப் பெண்ணே"** இக்கூற்று யாருடையது?

a) பாரதி
b) பாரதிதாசன்
c) நாமக்கல் கவிஞர்
d) கவிமணி

100. தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு

a) சாந்துணையும் கல்லாத வாறு
b) மாடல்ல மற்றை யவை
c) கடையரே கல்லா தவர்
d) காமுறுவர் கற்றறிந் தார்